Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 234 | திங்கட்கிழமை 18 ஜூலை 2022 | ஆடி 02 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 | விலை : ரூ. 50

முச்சந்தி முரளி



"இல்லாத பெற்றோலுக்கு விலையைக் குறைச்ச ஒரே ஒரு நாடு நாங்கள் மட்டும் தான் கண்டியளோ..."

## மூன்று ஆண்டுகளின் பின்னர் எரிபொருள் விலை குறைப்பு

### வியாழன் முதல் சீரான விநியோகம்

கொழும்பு, ஜூலை 18

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்றோல் மற்றும் டீசல் என்பவற்றின் விலையை நேற்று இரவு 10 மணி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைத்துள்ளது. அத்துடன், 92 ஒக்ரேன் பெற்றோல் மற்றும் ஒட்டோ டீசலை எதிர்வரும் வியாழக்கிழமை

12 ➤

எரிபொருள் நிரப்பு நிலையங்களில்

## நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களை அகற்றினால்தான் எரிபொருள்

### அமைச்சர் காஞ்சன திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 18

வாகனங்கள் அகற்றப்பட்ட பின்னரே அந்த எரிபொருள் நிலையங்களுக்கு எரிபோருள் விநியோகம் செய்யப்படும் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேயசேகர அறிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளதாவது:-

12 ➤

ஜனாதிபதித் தெரிவு:

# எம்.பிக்களுக்கு கொலை மிரட்டல்

### விசாரணைக்கு ரணில் பணிப்பு

கொழும்பு, ஜூலை 18

தேர்தலின்போது சுதந்திரமாக தமது வாக்குகளைப் பயன்படுத்துவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு காணப்படும் உரிமைக்கு இடையூறு விளைவித்து, சமூக வலைத்தளங்கள் ஊடாக அழுத்தம் - கொலை மிரட்டல் விடுக்கும் நபர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்புத் துறையினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

12 ➤

## வீடு புகுந்து பெற்றோல் திருட்டு

யாழ்., ஜூலை 18

யாழ். மாவட்டச் செயலகத்துக்கு அருகிலுள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில்இரண்டாவது தடவையாகவும் பெற்றோல் திருட்டு இடம்பெற்றுள்ளது. வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளிலிருந்துபெற்றோலை இருவர் திருடிச் சென்றமை, சி.சி.ரி.வி. காணொலி மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. (அ-ஒ-125)





## கோத்தா கோ கம வயது 'நூறு நாள்'

கொழும்பு, ஜூலை 18

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை பதவியிலிருந்து வெளியேற்றுவதற்காக காலிமுகத்

12 ➤

## யாரை ஆதரிப்பது?

### கூட்டமைப்பு இன்று முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 18

நாளை மறுதினம் புதன்கிழமை இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தெரிவில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் ஆராய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

11 ➤

## வணிக நிறுவனங்களுக்கும் விரைவில் 'பாஸ்' வசதி

கொழும்பு, ஜூலை 18

வணிக நிறுவனங்கள் அல்லது பல வாகனங்களை இயக்கும் நிறுவனங்கள், தங்களின் அனைத்து வாகனங்களையும் பதிவு செய்வதற்காக, தேசிய

12 ➤

ரணிலுக்கு

## முட்டுக் கொடுக்க மொட்டு உறுதி

விரிவு - பக். 11

## ரணிலுக்கு ஆதரவில்லை மக்கள் முன்னணி முடிவு

யாழ்., ஜூலை 18

ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்பு தொடர்பில் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்தித்துப் பேச்சு நடத்துவதில்லையென தீர்மானித்துள்ளதாக தமிழ்த்

11 ➤

கோத்தாபயவுக்கு

## சிங்கப்பூரிலும் சிக்கல்!

### அங்கிருந்து வெளியேறுமாறு அந்நாட்டு அரசு கோரிக்கை?

கொழும்பு, ஜூலை 18

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தொடர்ந்து சிங்கப்பூரில்

12 ➤

இலங்கை நிலைவரம்:

## இந்தியா சர்வகட்சி கூட்டத்துக்கு அழைப்பு

கொழும்பு, ஜூலை 18

இலங்கை நெருக்கடி தொடர்பான அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு இந்திய அரசாங்கம் நாளை அழைப்பு விடுத்துள்ளது என்று நாடாளுமன்ற விவகார அமைச்சர் பிரஹ்லாட் ஜோசி தெரிவித்துள்ளார்.

12 ➤

## வீடு புகுந்து மிரட்டி 20 பவுண் கொள்ளை

### 4பேர் சந்தேகத்தில் கைது
### போதைப்பாவனைக்கு அடிமையானவர்களாம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டத்தரிப்பு பகுதியில் நேற்று அதிகாலை வீடு புகுந்த கொள்ளையர்கள், கத்தி முனையில் அச்சுறுத்தி 20 பவுண் நகையை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

12 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியாக பதவியேற்க சஜித்துக்கே உரிமையுண்டு!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 18**

**பெருமளவான மக்களின் வாக்குகளைப்பெற்ற ஜனாதிபதி நாட்டை விட்டுச் சென்றதன் பின்னர், அடுத்தகட்டமாக அதிகளவான வாக்குகளுடன் இரண்டாம் நிலையிலுள்ள தெரிவு எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவே என்று ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.**

அவரைவிடுத்து மக்களாணை இல்லாத ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்கு சிறிலங்கா பொதுஜன பெரமுனவினர் வாக்களிப்பார்களேயானால் அது நாட்டு மக்களின் நலனை முன்னிறுத்திய தீர்மானம் அல்ல என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா மேலும் தெரிவித்ததாவது:-

பெருமளவான மக்களின் வாக்குகளைப்பெற்ற ஜனாதிபதி நாட்டை விட்டுச் சென்ற பின்னர், அடுத்தகட்டமாக அதிகளவான வாக்குகளுடன் இரண்டாம் நிலையிலுள்ள தெரிவு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆவார்.

அடுத்த ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான நாடாளுமன்ற வாக்கெடுப்பு எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், எமது தரப்பில் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவால் அடுத்த ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸ முன்மொழியப்பட்டதுடன்,அந்தயோசனை பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவினால் வழிமொழியப்பட்டது.

எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பின்போது சிறிலங்கா பொதுஜன பெரமுனவினர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிப்பதற்குத் தீர்மானிப்பார்களேயானால், அது நாட்டுமக்களின் நலனை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படக்கூடிய தீர்மானம் அல்ல.

மாறாக அது அவர்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கான மேற்கொள்ளும் தீர்மானமாகவே இருக்கும். தனியொரு தேசியப்பட்டியல் ஆசனத்தின் மூலம் நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கும் மக்களாணை என்ன?

அண்மையில் நாட்டுமக்களால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தின் அடிப்படைக்கோஷம் 'கோத்தா-ரணில் அரசாங்கம் வீட்டுக்குச் செல்ல வேண்டும்' என்பதாகவே காணப்பட்டது.

எதிர்வரும் 20ஆம் திகதி புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கு தமது வாக்குகளைப் பயன்படுத்தப் போகின்ற அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் நலனை இலக்காகக்கொண்டு, அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நபருக்கு வாக்களிக்கவேண்டியது அவசியமாகும்- என்றார். (எ-இ)

# ரணில் ஜனாதிபதியானால் ருவான் விஜயவர்தன எம்.பி.



கொழும்பு, ஜூலை 18

எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால், வெற்றிடமாகவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ருவான் விஜயவர்தனவை நியமிப்பது தொடர்பில் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தியுள்ளார்.

அவ்வாறு ருவான் விஜேவர்தன ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டால், அவருக்கு சட்டம் மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சுப் பதவியை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

# காணாமற்போன மீனவர்களில் இருவர் மீட்பு: ஒருவர் மாயம்!

மன்னார், ஜூலை 18

தலைமன்னார் கடலில் மீன்பிடிக்காகச் சென்ற 3 மீனவர்கள் படகுடன் காணாமற்போன நிலையில் அவர்களின் இருவர் இந்திய மீனவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளனர். ஒருவர் தேடப்பட்டு வருகின்றார்.

தலைமன்னார் பியர் துறையிலிருந்து குறித்த மூன்று மீனவர்களும் வடகடலுக்கு கடந்த 14ஆம் திகதி இயந்திரப் படகொன்றில் வலிச்சல் வலை மீன்பிடிக்காக சென்ற நிலையில், கடந்த இரு நாள்களாக அவர்கள் கரை திரும்பாததை அடுத்து அவர்கள் தேடப்பட்டு வந்தனர்.

பியர் பகுதியைச் சேர்ந்த ராசதுரை இராசசேகர் (வயது-52), ராஜமூர்த்தி மோகன்ராஜ் (வயது - 50), ராஜி ஜனாத் (வயது -27) ஆகிய மீனவர்களே இவ்வாறு காணாமற் போயிருந்தனர். இந்தநிலையில் அந்தப் பகுதி மீனவர்களும் கடற்படையினரும் இணைந்து நேற்று முன்தினம் தொடக்கம் மீனவர்களைத் தேடி வந்தனர். மீனவர்களில் இருவர் கடலில் தத்தளித்த நிலையில், தமிழக மீனவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளனர். மற்றையவர் தேடப்பட்டு வருகின்றார். (ச-60)

# கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 18

சர்வதேச சந்தையில், கச்சா எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நேற்றைய தினம் 101.2 டொலராக பதிவாகி இருந்தது.

கடந்த வாரம் 100 டொலருக்கும் கீழாக விலை நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், இந்த வாரம் விலை அதிகரிப்பு பதிவாகியுள்ளது. (ம)

# மோசடி அரசியலுக்கு முடிவுகட்டவே போட்டி

## டலஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

மோசடி அரசியல் கலாசாரத்துக்கு முடிவு கட்டுவதே ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கக் காரணம் என்று பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். தனது ருவிற்றரில் அவர் வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதான எதிர்க்கட்சி மற்றும் பிற எதிர்க்கட்சிகளுடன் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத கூட்டணி அரசாங்கத்தைக் கட்டியெழுப்புவதற்காகவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளேன் என்றும் அவர் தெரிவித்தார். (ம)

# கல்வி, சுகாதாரம் என்பவற்றுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம்

## பாலித கோஹன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியும் உலக வங்கியும் அதிகளவு பங்களிப்பை வழங்கவேண்டும் என சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் பாலித கோஹன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

அதிகரிக்கும் ஆர்ப்பாட்டங்கள், அத்தியாவசியப் பொருள்கள் பற்றாக்குறை, அவசரகால நிலைமை பிரகடனம் போன்ற தொடரும் நிலைமைகளுக்கு மத்தியில் கடனில் சிக்கியுள்ள நாட்டுக்கு அதன் சகாக்கள் மேலும் உதவிகளை வழங்க வேண்டும்.

கடந்த மாத இறுதியில் சர்வதேச நாணயநிதியம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டது.

எங்களுக்குக் கிடைத்த அறிக்கைகளின்படி பேச்சு திருப்திகரமான முறையில் இடம்பெற்றுள்ளன. நாங்கள் லண்டனில் சட்டஆலோசகர்களை நியமித்துள்ளோம்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பாகப் புரிந்துகொள்ளக்கூடிய மேற்குலக நிபுணர்களையும் நாங்கள் நியமித்துள்ளோம். ஆனால், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு ஆரம்ப கட்டத்திலேயே உள்ளன.

புதிய அரசாங்கம் பதவியேற்றதும் சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சுக்கான புதிய ஏற்பாடுகள் இடம்பெறும்.

சர்வதேச நாணயநிதியம் வரும் ஒவ்வொரு முறையில் எங்களை இறுக்கிக்கொள்ள வேண்டியது. செலவுகளைக் கட்டுப்படுத்த குறைக்க வேண்டியது தவிர்க்க முடியாதது. சில சந்தர்ப்பங்களில் நாங்கள் இறுதிக்கட்டத்தில் இருப்பதால் இது கடினமானது.

சர்வதேச நாணயநிதியம் சுகாதாரத் துறைக்கு அரசாங்கம் வழங்கும் நிதியை (இலவச சுகாதார சேவை) குறைக்குமாறு வேண்டுகோள் விடுக்கலாம் என நாங்கள் கவலை கொண்டுள்ளோம்.

அதேபோன்று இலவசக்கல்வி குறித்தும் சர்வதேச நாணயநிதியம் பரிந்துரைகளை முன்வைக்கலாம். இது மேலும் அமைதியின்மையை ஏற்படுத்தலாம் - என்றார். (எ-இ)

# 40,000 தொன் டீசலுடன் மற்றொரு கப்பல் வந்தடைவு

கொழும்பு, ஜூலை 18

40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலுடன் மற்றுமொரு கப்பல் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இலங்கையை வந்தடைந்தது.

மாதிரிப் பரிசோதனையின் பின்னர் குறித்த கப்பலில் உள்ள டீசலை இறக்கும் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை- 41 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலுடன் பிறிதொரு கப்பல் நேற்றுமுன்தினம் நாட்டை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எரிபொருள் நெருக்கடி*

## நாடாளுமன்றம் செல்ல எம்.பி.க்கள் பின்னடிப்பு

கொழும்பு, ஜூலை 18

எதிர்வரும் நாள்களில் நாடாளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்கப்போவதில்லை என அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் தெரிவித்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

எரிபொருளை பெற்றுக்கொள்ளும் முறையான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் நாடாளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்கமுடியாது என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எரிபொருள் விவகாரம் தொடர்பில் சபாநாயகரிடம் முறைப்பாடு செய்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர் வடக்கு - கிழக்கு உள்ளிட்ட தூர பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். எரிபொருள் பிரச்சினை காரணமாக கடந்த சில நாள்களாக நாடாளுமன்ற நடவடிக்கைகளில் பல உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஜனாதிபதியை நியமிப்பதற்கான முக்கியமான வாக்கெடுப்பு இந்த வாரம் நடைபெறவுள்ளது. அதனால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கான முறையான வேலைத் திட்டத்தை தயாரிக்கவேண்டும் என்று சபாநாயகர், அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார் என்று தெரியவருகின்றது. (எ-இ)

# நாடாளுமன்றில் ரணிலுக்கு 140 வாக்குகள் கிடைக்கும்

## முன்னாள் அமைச்சர் வஜிர தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 18**

**இடைக்கால ஜனாதிபதி பதவிக்கான வாக்கெடுப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள நிலையில், அதில் ரணில் விக்கிரமசிங்க சுமார் 140 வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார் என முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது நாட்டுக்குத் தேவையான விடயங்கள் தொடர்பாக கட்சித் தலைவர் என்ற ரீதியில் ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடியுள்ளேன்.

நான் உணர்ந்த வரையில் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறைந்தது 140 வாக்குகளைப் பெற்று அனைவரின் ஆசியுடன் ஆட்சிக்கு வருவார். 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இலங்கையை மிக உயர்ந்த இடத்துக்கு உயர்த்திக் காட்டுவார், இதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. அவரை நம்புங்கள், அவர் 50 வருட அனுபவமுள்ள அரசியல் தலைவர் - என்றார். (எ-இ)

## தவறுகள் இழைத்ததை ஒப்புக்கொண்ட பஸில்!



கொழும்பு, ஜூலை 18

தங்களது ஆட்சிக்காலத்தில் தவறுகள் இடம்பெற்றுள்ளன என்று முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பு, வார இதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தவறான தீர்மானங்கள், காலத்துக்குக் காலம் சரியான தீர்மானங்களை எடுக்காமை மற்றும் அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் காரணமாகவே இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எங்கள் கட்டமைப்பை விரைவாக உருவாக்கினோம். நல்லாட்சி அரசாங்கத்தைவிடவும் நல்லாட்சியை நடைமுறைப்படுத்தச் சென்றோம். அங்குதான் எமது அரசாங்கம் தவறிழைத்துள்ளது. எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக இப்போது எதுவும் செய்ய முடியாது - என்றார். (எ-இ)

## ரணில் ஜனாதிபதியாவதை ஏற்றுக்கொள்ளமுடியாது!

### தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மத்திய நிலையம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

கோத்தாபய ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க இருவரும் பதவியை விட்டு விலகவேண்டும் என்றுதான் மக்கள் போராட்டம் நடத்தினார்கள். எனவே, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி, பிரதமர் இருவரும் பதவி விலகவேண்டும் என்பதுதான் மக்களின் கோரிக்கையாக இருந்தது. கோத்தாபய பதவி விலகியுள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்க அந்தப் பதவியைப் பெற்றுக்கொள்ள முனைவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. ரணிலும் உடனடியாகப் பதவி விலகவேண்டும்.

20ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி பதவிக்கான வாக்கெடுப்பில் அவர் வெற்றிபெற்றால் 21 ஆம் திகதி முதல் போராட்டத்தில் ஈடுபடுவோம். மக்களின் குரலுக்கு செவிசாய்த்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொள்ளவேண்டும். ரணிலை மக்கள் புறக்கணித்துள்ளனர் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் உணர்ந்து செயற்படவேண்டும் - என்றுள்ளது. (ம)

## எகிறிச் செல்கின்றது இலங்கையின் கடன்

கொழும்பு, ஜூலை 18

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கை அரசாங்கம் 9 ஆயிரத்து 700 கோடி அமெரிக்க டொலர் கடன் சுமையில் உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்குள் இலங்கை 4 ஆயிரத்து 700 கோடி அமெரிக்க டொலர் (47 பில்லியன்) வெளிநாட்டுக் கடனுக்கு உள்ளாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. பின்னர் 5 ஆயிரம் டொலர் (50 பில்லியன்) உள்நாட்டு கடனுக்கு உட்பட்டுள்ளது.

தற்போது 50 பில்லியன் டொலர் கடன் தொகை மேலும் அதிகரித்துள்ளது என்று கூறப்படுகிறது. கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை கடனை கணக்காய்வு செய்தபோது ஒரு டொலரின் மதிப்பு சுமார் 203 ரூபாவாகும்.

தற்போது டொலர் ஒன்றின் பெறுமதி 355 இலங்கை ரூபாவாக அதிகரித்துள்ளத்தால் கடன் சுமை மேலும் ஒன்றரை மடங்கு அதிகரித்துள்ளது என்று தெரியவருகின்றது. (எ-இ)


**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சாதாரண கல்வி கற்று பிரானிஸில் தொழில்பார்க்கும் 1981, பூரம் முதலாம் பாதம். கிரகபாவம் 66 லக்கினத்தில் சூரியன் செவ்வாய் மணமகனுக்கு மணமகள் தேவை.

**075 617 8008**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சாதாரண கல்வி கற்று சுயதொழில்புரியும் 1978, கேட்டை நட்சத்திரம் 3ஆம் பாதம். 11 இல் சூரியன் செவ்வாய். கி.பா-56 மணமகனுக்கு மணமகள் தேவை.

**078 461 1231**


## கோத்தாபய தோல்வியடைய சூழ்ந்திருந்தவர்களே காரணம்

### முன்னாள் நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

கோத்தாபய ராஜபக்சவுக்குப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஆலோசனை வழங்கியவர்களின் பிழையான தீர்மானங்களே கோத்தாபய நாட்டிலிருந்து வெளியேறக் காரணம் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் நீதி அமைச்சருமான அலிசப்ரி தெரிவித்துள்ளார். நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கோத்தாபய ராஜபக்ச நாட்டை கட்டியெழுப்ப பல விடயங்களை மேற்கொண்ட நிலையில், சில பிழையான ஆலோசனைகளால் தோல்வி கண்டுள்ளார். இருப்பினும், அவர் திருடவில்லை, கொள்ளை அடிக்கவில்லை, மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணவே முயற்சித்தார். நாட்டின் தற்போதைய அரசியல் செயற்பாடுகளால் மன விரக்தியடைந்திருக்கின்றேன். இந்த நாடாளுமன்றத்துக்குப் பின்னர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதில்லை. நாட்டின் அரசியல் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது மனம் விரக்தியடைந்திருக்கின்றேன்.

மக்களுக்கு நாட்டுக்கு ஏதாவது சேவை செய்யவேண்டும் என்ற நோக்குடனே அரசியலுக்கு வந்தேன். நாடாளுமன்றத்தில் கலந்துரையாடி மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாத நிலை இருக்குமானால் தொடர்ந்து இந்த அரசியலில் இருப்பதில் பயன் இல்லை.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக்கும் முயற்சியில் நானும் தீவிரமாக ஈடுபட்டேன். அரசாங்கம் என்ற வகையில் எம்மிடமும் சில தவறுகள் இருந்தன. தீர்மானங்களை எடுக்கும்போது நாங்கள் அதை விரைவாக மேற்கொண்டிருக்க வேண்டும்.

முக்கியமாக சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல் ஆரம்பத்திலேயே மேற்கொண்டிருந்தால் பொருளாதார நெருக்கடியை சமாளித்துக்கொள்ள முடிந்திருக்கும் - என்றார். (எ-இ)


**அறிவித்தல்**

**சுஜீவா வைத்தியசாலை**

(சித்த ஆயுள்வேத பாரம்பரிய மருத்துவம்)

(நாச்சிமார் கோவில் அருகாமை காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.)

வெளிமாவட்டம் மற்றும் வெளிநாட்டிலிருந்து வருகை தருபவர்கள் ஒரு மாதமும் அதற்கு மேற்பட்டதுமான மருந்துகளை கொள்வனவு செய்வதால் எமக்கு தற்காலிகமான மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக மூலிகைகள் சேகரித்தலும் மருந்துகள் தயாரித்தலும் இடம் பெறுவதால் 19,20,21 ஆகிய திகதிகளில் வைத்தியசாலை மூடப்பட்டிருக்கும்.

ஏற்கனவே மருந்துகளைப் பெறுபவர்கள் 22ஆம் திகதி முதல் வைத்தியசாலைக்கு வருகைதருமாறு வேண்டப்படுகிறீர்கள்.

புதிதாக மருத்துவ சிகிச்சைக்காக வருபவர்கள் தயவு செய்து 25ஆம் திகதி முதல் வருகை தருமாறு வேண்டப்படுகிறீர்கள்.

**077 5594147**

Dr.ஜெ.ஜெயபலன்

Dr.திருமதி.ச.ஜெயபலன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 19 – 10 – 1974

விண்ணில் 17 – 07 – 2022

எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி பங்கயச்செல்வி யசோகரன் அவர்களின் அன்புக் கணவர்

## அமரர் பூவிலிங்கம் யசோகரன்

அவர்களின் பிரிவால் தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம்
மல்லாகம்.

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 08 . 12 . 1943

மறைவு 04 . 06 . 2022

## பொன்னையா இரத்தினபூபதி


அன்பின் அம்மாவே
நாட்கள் நாற்பத்தைந்து சென்றிடினும்
மறைந்திடுமோ உன் நினைவுகள்
பரிதவிக்குதம்மா எம் நெஞ்சம்
உன் புன்சிரிப்பை காண
விழியோரம் கண்ணீருடன்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

(CS 200131-5)

'ஈஞ்சடி'
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 03 - 12 - 1947

இறப்பு 18 - 06 - 2022

கடந்த 18.06.2022 அன்று இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## தம்பிராசா தருமராயரத்தினம்

(கார்க்கார தருமு)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (18.07.2022) திங்கட் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
077 346 3429

(cs.45600) (2.6)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி ரதி ஈஸ்வரன்
அவர்களின் அன்புத் தாயார்

## சுந்தர சிவபாக்கியம் அம்மா

அவர்கள் கடந்த (17.07.2022) இறைபதமெய்திய மையையிட்டு அவர்களின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

# மரண அறிவித்தல்



தோற்றம் 03 - 03 - 1934

மறைவு 17 - 07 - 2022

## அமரர்.A.K சண்முகநாதன்

யாழ்.பருத்தித்துறை கிராமக்கோட்டினைப் பிறப்பிடமாகவும் நீண்டியம்பற்றையினைப் வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தரும் முன்னாள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரின் பிரத்தியேக செயலாளருமாகிய ஆறுமுகம் கந்தையா சண்முகநாதன் அவர்கள் நேற்று (17.07.2022) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.


அன்னார் காலஞ்சென்ற கந்தையா சீதேவிப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் இரத்தினம் அவர்களின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி (ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும் செந்தில் குமரேசன் (சிங்கப்பூர்), யசோதரன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நிரஞ்சலா, சுகந்தினியின் அன்பு மாமனாரும் அமுதா, ஜதுனன், ராகேஸ், ராகிதா, ரக்ஷிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2022) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீண்டியம்பற்றை
புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை.

தகவல்:
மகன் -: ச.செந்தில் குமரேசன் +6581618829
மகன் -: ச.யசோதரன் 076 943 5457
021 226 3001

# மரண அறிவித்தல்



பிறப்பு . 15 . 12 . 1955

இறப்பு . 17 . 07 . 2022

## கந்தையா பாலசுந்தரம்

(முன்னாள் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை உத்தியோகத்தர்)

எழுதுமட்டுவாழ் தெற்கு எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசுந்தரம் நேற்று (17.07.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், பாலகௌரி, பிரகாஷ், புஸ்பாகரன் (கணக்காய்வு உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்), சுதர்சன், இளங்கோ, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற வர்களான நடராசா, மகேஸ்வரி, பூபதி, பாலசுப்பிரமணியம் மற்றும் தங்கராசா (முன்னாள் யாழ். பல்கலைக்கழக நிர்வாகப் பிரிவு உத்தியோகத்தர்), கனகசுந்தரம், கனகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சசிக்குமார், சந்திரமதி, சிந்துஜா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், தென்மராட்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கேசவன், லக்சன், காருண்யா, அட்சயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2022) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பி.ப 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக இராமியன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 364 1836

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 36665) 1/6


# இந்தியாவிலும் குரங்கு அம்மை



புதுடில்லி, ஜூலை 18

இந்தியாவில் முதல் முறையாக கேரளாவில் ஒருவருக்கு குரங்கு அம்மைத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அங்கு குரங்கு அம்மை பரவலைத் தடுப்பதற்கு தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆபிரிக்க நாடுகளில் உருவாகிய இந்தக் குரங்கு அம்மை நோய் தற்போது ஐரோப்பிய நாடுகள் வரை பரவி கதிகலங்க வைத்துள்ளது.

இந்த நிலையில் ஐக்கிய அரபு அமிரகத்தில் இருந்து கேரளாவுக்கு வந்த ஒருவருக்கு குரங்கு அம்மை நோய் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. (ச-இ)

# சிறுவர்களிடையே பரவும் காய்ச்சல்!

கொழும்பு, ஜூலை 18

டெங்கு, இன்புளுவென்சா மற்றும் கொரோனா முதலான நோய்கள் சிறார்களிடையே பரவும் அபாயம் தற்போது உள்ளது என்று சுகாதாரத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நோய் நிலைமைகளுக்கு உள்ளாகும் சிறார்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று சிறுவர் நோய் விசேட மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொரோனா பரவலானது தற்போதும் சமூகத்தில் உள்ளது. பரிசோதித்துப் பார்த்தால், அதை அறியலாம். காய்ச்சல் உள்ளிட்ட நோய் அறிகுறிகள் தென்பட்டால், சில நேரம் இன்புளுவென்சா அல்லது கொரோனாத் தொற்றாக இருக்கலாம்- என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நாளொரு நல்வார்த்தை

"எந்த வீட்டில் நூல் நிலையம் இருக்கிறதோ, அந்த வீட்டில்தான் ஒளிவிளக்கு இருக்கிறது" - பிளாட்டோ

## மீண்டும் சாக்கடைக்குள் நாடு

**கா**லிமுகத்திடலில் நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கு மட்டுமே பொசிந்திருக்கிறது. எந்த நெல் விளையவேண்டுமென்று – என்னென்ன மாற்றங்கள் நிகழ வேண்டுமென்று – இளையோர் காலிமுகத்திடலில் போராடினார்களோ அந்தப் போராட்டத்தின் ஒட்டுமொத்த விளைச்சலையும் ரணில் விக்கிரமசிங்க தனியொருவராக அறுவடை செய்யத் தொடங்கியுள்ளார். ராஜபக்ச குடும்பத்தை ஆட்சியதிகாரத்தில் இருந்து இப்போதைக்கு அகற்றியது மட்டுமே போராட்டக்காரர்களுக்கு கிடைத்த உடனடி வெற்றி. ஆனால், தனியே அவர்கள் ராஜபக்ச குடும்பத்துக்கு எதிராக மட்டும் போராடவில்லை. ரணிலுக்கு எதிராகவும் போராடினார்கள், பொதுஜன பெரமுனவின் ஆட்சிக்கு எதிராகப் போராடினார்கள், பொருளாதார நெருக்கடிக்கு எதிராகப் போராடினார்கள், நாட்டையே கெடுத்துச் குட்டிச்சுவராக்கிய அரசமைப்பை எதிர்த்துப் போராடினார்கள், புதியதொரு அரசியல் கலாசாரத்துக்காக போராடினார்கள். இப்படி அவர்கள் போராட்டத்தின் இலக்காக நிர்ணயித்த விடயங்கள் பல. ஆனால், அவற்றில் ஒன்று மட்டுமே ஒப்பேறியிருக்கிறது. அந்த ஒற்றை வெற்றியில் போராட்டக்காரர்கள் திளைத்திருக்க, மறுபுறமாக ரணில் அந்தப் போராட்டத்தின் பலன் அனைத்தையும் தன் சட்டைப் பையில் லாவகமாகப் போட்டுக் கொண்டு விட்டார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியென்பது ரணிலின் நெடுநாளையக் கனவு. பலமுறை அந்தப் பதவி கைக்கெட்டியும் ரணிலின் வாய்க்கெட்டாதிருந்தது. இப்போது பதவிப் பழம் நழுவி ரணிலின் பாலின் விழுந்துள்ள நிலையில், அதனை கைவிட அவர் தயாராகவில்லை. அதனாலேயே ரணிலையும் அதிகாரத்தை விட்டு வெளியேறுமாறு மக்கள் போராடுகின்ற போதும், அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல், அடுத்த ஜனாதிபதியாக வரும் திரைமறைவு முயற்சிகளில் ரணில் மிகத்தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்.

ரணில் ஜனாதிபதியாவதையே ராஜபக்சக்களும் விரும்புகின்றனர். ஏனெனில் சஜித்தோ, அநுராவோ ஜனாதிபதியாகிவிட்டால், நிச்சயமாக ராஜபக்ச குடும்பத்தினரின் அத்தனை திருகுதாளங்களையும் தோண்டியெடுத்து, சட்டநடவடிக்கைகளில் இறங்கவே செய்வர். ஆனால், ரணில் அப்படியல்லர். ரணில் நல்லாட்சிக் காலத்தில் ராஜபக்சக்களைக் காப்பாற்றினார், ராஜபக்சக்கள் தமது ஆட்சிக்காலத்தில் ரணிலைக் காப்பாற்றினார்கள், பின்னர் போராட்டத்தின் விளைவால் பிரதமர் மஹிந்த பதவியில் இருந்து அகன்றபோதும் ரணிலே மீண்டும் ராஜபக்சக்களைக் காப்பாற்றினார். இந்தக் காப்பாற்றும் படலம் இனியும் தொடரும் என்ற நம்பிக்கையில்தான் ரணிலைக் கொண்டுவர ராஜபக்சக்கள் விரும்புகின்றனர். அதனாலேயே இன்னும் நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலத்தோடு இருக்கும் பொதுஜன மெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவாசம் 'ரணிலையே ஆதரிப்போம்' என்று அறிக்கை விட்டுள்ளார். ஆனாலும், இப்போது ராஜபக்சக்கள் மீதான பயம் அற்றுப்போனதால், பெரமுனவின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் 'டலஸையே எமது கட்சி ஆதரிக்கும்' எனப் போர்க்கொடி தூக்கியுள்ளார். இந்தத் திருப்பத்தை ராஜபக்சக்களோ, ரணிலோ எதிர்பார்க்கவில்லை. பெரமுனவுக்குள் இப்படியொரு பிளவு ஏற்பட்டுள்ளதால், ரணிலின் ஜனாதிபதிக் கனவு மீண்டும் ஊசலாடத் தொடங்கியிருக்கிறது. எப்படியாவது , என்ன விலை கொடுத்தாவது ஜனாதிபதிப்பதவியை அடைவதற்காக ரணில் தன்னாலான அத்தனை அரசியல் காய்நகர்த்தல்களையும் மேற்கொண்டு, மக்களின் எதிர்பார்ப்பை தவிடுபொடியாக்க நினைக்கிறார்.

சட்டியில் இருந்து தப்பித்து அடுப்புக்குள் விழுந்த நிலையிலேயே இலங்கை மக்கள் இருக்கிறார்கள். இத்தகைய அரசியல் சாக்கடையில் தொடர்ந்தும் நாடு நாறிக்கொண்டிருப்பதற்காக மக்கள் போராடவில்லை. ஏற்கனவே உள்ள எல்லாக் கழிவுகளையும் அகற்றி, புதியகலாசாரத்தோடு, புதிய சிந்தனையோடு, புதிய அரசாமைப்போடு, சகல மக்களுக்குக்கும் சமமான வாழ்வை ஏற்படுத்தும் புதியதொரு இலங்கைக்காகவே காலிமுகத்திடல் போராட்டம் நடத்தப்பட்டது.ஆனால், அந்த நோக்கத்தை மாற்றிவிட்டு, மீண்டும் அதே பழைய குட்டைக்குள் நாட்டைக் கொண்டு சென்று வீழ்த்தும் கைங்கரியத்திலேயே அரசியல்வாதிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். மஹிந்த குடும்பத்துக்கு நேர்ந்த கதியைக்கூட அவர்கள் கவனித்ததாகத் தெரியவில்லை. எனவே உண்மையாகவே போராட்டக்காரர்கள் தாம் அடைய நினைத்த புதியதொரு இலக்கையை எட்டும் வரை போராட்டத்தை தொடர்வதே நாட்டை மீட்பதற்கான ஒரேயொரு வழி.




### எரிபொருள் தட்டுப்பாடு

# தண்ணீர் விநியோகம் மன்னாரில் நிறுத்தம்!

### அவதிக்குள்ளாகும் மக்கள்

**மன்னார், ஜுலை 18**

**மன்னார் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் எந்தவித முன்னறிவித்தலுமின்றி குடிதண்ணீர் விநியோகம் தடைசெய்யப்பட்டுள்ளதால் அங்குள்ள பல கிராமங்கள் குடிதண்ணீர் இன்றி அல்லற்படுகின்றன என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

மன்னார் மாவட்டத்தில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் மன்னார் நகர், திருக்கேதீச்சரம், வங்காலை, தோட்டவெளி, எருக்கலம்பிட்டி, காட்டாஸ்பத்திரி, அடம்பன், விடத்தல்தீவு ஆகிய பல கிராமங்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெற்றது.

இந்த் நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல் எந்தவித முன்னறிவித்தலுமின்றி குடிதண்ணீர் விநியோகம் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனால் மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான குடிதண்ணீர் இன்றி மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதுதொடர்பில் மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரியை தொடர்புகொண்டு கேட்டபோது,

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குடிதண்ணீர் விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் குடிதண்ணீர் விநியோகம் செய்யும் இடங்களுக்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் வழங்கப்படாமையால் அங்கு சென்று செயலாற்ற முடியாத போக்குவரத்துச் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எமக்கான எரிபொருளைப் பெற்றுத்தருமாறு மாவட்டச் செயலருக்கு தெரியப்படுத்தப்பட்டபோதும் இதுவரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. எனினும் மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்தை முன் னெடுத்துச் செல்வதற்கான முயற்சியை மேற்கொள்வோம் - என்றார். (ச-60)

## எரிபொருளில் 10 சதவீதம் உற்பத்தித்துறைகளுக்கு!

கொழும்பு, ஜுலை 18

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தால் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் அளவில், 10 வீதத்தை உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அந்தச் சங்கத்தின் தலைவர் சுசந்த கோசல விதானாராச்சி, தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போதையநிலையில், லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் மாத்திரமே நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியாக எரிபொருளை விநியோகிக்கிறது. அதனால் அதை உரிய முறையில் முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு எமக்கு உள்ளது. அதனாலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது- என்றார். (எ-இ)

நாளை 19.07.2022 செவ்வாய்க்கிழமை ஆடி 03

சுபநேரம் : 10.31 - 12.01
ராகுகாலம்: 03.01 - 04.31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த தகவல் உங்களுக்கு வந்து சேரும். நண்பர்கள் உதவி செய்வார்கள். உங்களைத் தேடி பெரியவர்கள் வருவார்கள். திடீர் யோகம் ஏற்படும் நாள். குடும்பத்தினருடன் கோவிலுக்குச் செல்வீர்கள்.

**இடபம்:** வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும். நேற்றைய எதிர்பார்ப்பு ஒன்று இன்று நிறைவேறும். தொழிலை விரிவு செய்ய திட்டமிடுவீர்கள். வரவேண்டிய பணம் வந்து சேரும்.

**மிதுனம்:** வருமானத்துக்குரிய வழிகளைக் கண்டறிவீர்கள். உங்கள் முயற்சி லாபமாகும். புதிய சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**கடகம்:** உடல் சோர்வால் ஓய்வை விரும்புவீர்கள். புதிய முயற்சி இன்று வேண்டாம். செயல்களில் குழப்பம் உண்டாகும். பயணத்தில் கவனம் தேவை. வாகனம் பழுதடையக்கூடும். மனதில் குழப்பம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** உங்கள் வார்த்தைக்கு குடும்பத்தினர் மதிப்பளிப்பார்கள். உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

**கன்னி:** உறவினர் ஒருவருக்கு ஏற்பட்ட பிரச்சினையை முன்நின்று தீர்த்து வைப்பீர்கள். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். தடைகள் விலகும் நாள். பொதுநலனில் அக்கறை காட்டுவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும்.

**துலாம்:** பொறுப்புகள் அதிகரிக்கும். மேலை நாட்டு தொடர்பு ஒன்றால் நன்மை ஏற்படும். குடும்பத்தினருடன் வாக்கு வாதம் வேண்டாம். சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். பயணத்தால் ஆதாயம் காண்பீர்கள்.

**விருச்சிகம்:** எதிர்பார்ப்பு ஒன்று தள்ளிப் போகும். குடும்பத்தில் சலசலப்பு உண்டாகும். தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். நண்பர்களால் அனுகூலம் காண்பீர்கள். வியாபாரத்தில் அனுகூலம் ஏற்படும்.

**தனுசு:** நேற்றைய எண்ணம் ஒன்று நிறைவேறும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். நண்பர்களின் வழியே நன்மை காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். வேலை தேடியவர்களுக்கு வாய்ப்பு வரும்.

**மகரம்:** எதிர்கால வாழ்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள். குடும்பத்தை மகிழ்ச்சிப்படுத்துவீர்கள். திட்டமிட்டு செயல்களை நடத்தி முடிப்பீர்கள். பண வருவாய் அதிகரிக்கும்.

**கும்பம்:** சங்கடத்தை மறந்து செயற்படுவீர்கள். புதிய செயல் ஒன்று நிறைவேறும். கடந்த கால அனுபவங்களைக் கொண்டு உங்கள் வளர்ச்சியில் வழி காண்பீர்கள். பழைய பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும்.

**மீனம்:** எதிர்பார்த்த தகவல் வீடு வந்து சேரும். பிரபலங்களின் ஆதரவால் புதிய பாதை தெரியும். செலவை கட்டுப்படுத்துவது பற்றிச் சிந்திப்பீர். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்புண்டாகும். முயற்சி ஒன்றில் வெற்றி காண்பீர்கள்.

வெளிமாவட்ட சிகிச்சைக்குச் செல்ல

# போக்குவரத்து நெருக்கடியாயின் நோயாளிகள் தொடர்புகொள்க!

## கிளி. மாவட்ட மருத்துவமனை அறிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 18

கிளிநொச்சியிலிருந்து வெளிமாவட்ட மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காகச் செல்லும் மக்கள், போக்குவரத்து நெருக்கடி காரணமாக, சிகிச்சையைத் தொடர முடியாத நிலைமை ஏற்படின் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட மருத்துவமனை நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

மாதாந்த அல்லது ஏனைய சிகிச்சைகளுக்குச் செல்லும் பொதுமக்கள் போக்குவரத்து நெருக்கடி காரணமாக மாவட்டத்துக்கு வெளியே செல்ல முடியாத நிலையில் இருப்பின் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையைத் தொடர்புகொள்கின்றபோது மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க முடியுமாயின் அவ்வாறானவர்களுக்கு மாவட்டத்திலேயே சிகிச்சை அளிக்கவும், ஏனையவர்களுக்கு போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் தாம் நடவடிக்கைகள் மேற்கொள்வோம் என்று கிளிநொச்சி மாவட்ட மருத்துவ நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-214)




# வடமாகாண எரிபொருள் நிரப்புநிலைய உரிமையாளர்கள் இணையம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் இயங்கும் சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களை உள்ளடக்கிய எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்காக, வடமாகாண எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் இணையம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் இந்த இணையத்துக்கான நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் தலைவராகப் பருத்தித்துறை மீனவ நண்பன் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் ஜெய்சங்கர் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக நாவற்குழி எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் சு.சுதர்சன், பொருளாளராக அளவெட்டி, மல்லாகம் கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தின் சார்பில் கூட்டுறவுச்சங்கத் தலைவர் கணேசலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன், வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸமா அதிபர் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

எதிர்காலத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் கூட்டிணைவுச் செயற்பாட்டின் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எரிபொருள் விநியோகிப்பது தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது. (ம-214)

# ஆறு மாதங்களில் 12 பேர் நீர்வெறுப்பு நோயால் சாவு!



கொழும்பு, ஜூலை 18

கடந்த ஆறு மாதங்களில் 12 பேர் நீர்வெறுப்பு நோயால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுச்சுகாதார கால்நடை சேவை பணிப்பாளர் கலாநிதி எல்.டி.கித்சிரி இதுதொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

95 வீதமான நீர்வெறுப்பு நோய்த்தொற்றுகள் நாய் கடிப்பதனால் ஏற்படுகின்றன.

நாய்க்குட்டிகள் மூலமும் குறித்த நோய் பரவி அதிக ஆபத்தை ஏற்படுத்துகின்றது. கடந்த ஆறு மாதங்களில் 5 இலட்ச நாய்களுக்கு இலவசமாகத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. 30 ஆயிரம் தெரு நாய்களுக்கு கருத்தடை செய்து அவற்றின் இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், நாட்டில் 20 முதல் 30 மில்லியன் நாய்கள் உள்ள நிலையில், ஆண்டுக்கு சுமார் 1.1 மில்லியன் நாய்களுக்கு மட்டுமே தடுப்பூசி போடப்படுகின்றது. தற்போதுள்ள மருத்துவ நெருக்கடியைக் கருத்திற்கொண்டு பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் - என்றார். (ம)

# புளொட் அமைப்பின் வீரமக்கள் தினம்!

## வவுனியாவில் கடைப்பிடிப்பு



வவுனியா, ஜூலை 18

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் 33 ஆவது வீரமக்கள் தினம் வவுனியா கோவில்குளத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெபற்றது. ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த (புளொட்) க.சந்திரகுலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், பிரதேசசபைகளின் தவிசாளர்களான சு.சிவம், த.யோகராஜா, நகரசபை பிரதேசசபைகளின் உறுப்பினர்கள், சிரேஷ்ட உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-110)

# மழை தொடரும்

கொழும்பு, ஜூலை 18

மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும், நுவரெலியா, கண்டி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இன்றைய தினம் மழையுடனான வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.


ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் இரவு வேளையில், மழை அல்லது இடியுடன்கூடிய மழை பெய்யக்கூடும். அதேநேரம், புத்தளம் முதல் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான மற்றும் அம்பாந்தோட்டை முதல் பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் காற்று மணிக்கு 55 கிலோமீற்றர் வரையில் அதிகரித்த வேகத்தில் வீசக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 03 . 1983

இறப்பு 16 . 07 . 2022



## மகாலிங்கம் ரவிராஜ்

உரும்பிராய் கிழக்கு, சிவன்வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் ரவிராஜ் நேற்றுமுன்தினம் (16.07.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் சத்திய தேவி தம்பதியரின் அன்புப் புதல்வனும், மனோகரன் இந்திராணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், அனோஜாவின் அன்புக் கணவரும், தமீஸ், பிரியந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பகீரதன், நிறோசன், தர்ஷிகா, துஷானிகா, நிலானிகா, அனுஷிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2022) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கோப்பாய் இளங்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**077 923 4946** (cs 45583) (2.6) **குடும்பத்தினர்.**

# 31ஆம் நாள் நினைவு நிகழ்வும் நன்றி நவிலலும்



தோற்றம் : 22.01.1971 மறைவு : 19.06.2022

கடந்த 19.06.2022 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## அமரர் சாந்தமலர் ஐங்கரன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (18.07.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் எம் குடும்பத் தலைவி மீளாத் துயில் கொண்ட செய்தியறிந்து நேரிலும், தொலைபேசியூடாகவும், சமூகவலைத்தளங்களினூடாகவும், பதாகைகள், துண்டுப் பிரசுரங்கள் மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், பத்திரிகை வாயிலாக கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், இரங்கல் உரை ஆற்றியவர்களுக்கும், தக்க தருணத்தில் சரீர உதவி உட்பட அனைத்து உதவிகள் புரிந்தவர்கட்கும் இறுதிக்கிரியைகள், இறுதி நிகழ்வுகளில் பங்கு பற்றியவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (CS 20002) (3/6)

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு. **குடும்பத்தினர்**




நவாலி கிழக்கு, நவாலி தெற்கு அலுவலர் பிரிவு களில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 13 மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக அவர்களது வங்கிக்கணக்கில் பணம் வைப்பிலிடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் பலாலி முருகமூர்த்தி ஆலய வளாகத்தில் இடம்பெற்றது. நவாலி கிழக் கைச் சேர்ந்த வேலாயுதம் நாகாராசாவின் 77 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு குறித்த மாணவர்களுக்கு இலங்கை வங்கியில் தலா 3 ஆயிரம் ரூபா வைப்பிலிடப்பட்டது. (ச-125)



கொடிகாமம் - கோவிலாமனையிலுள்ள அருள்மிகு அண்ணமார் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் நிகழ்வு நேற்றுமுன் தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. தொடர்ந்து விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெற்றன. (ச-159)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## ஆர்.டபிள்யூ.எம். பஸ்தியாம்பிள்ளை

(நிறுத்தல் அளவை– திணைக்களம்)

அன்னார் திரேசம்மா (யா/ போ.வைத்தியசாலை) அவர்களின் அன்பு கணவரும், மேரிபேள் (ஜேர்மனி), அருள்றாஜ், திரேசிற்றா (B.A) (ஓய்வு பெற்ற ஆசிரியர், யாழ் சென். ஜேம்ஸ் வித்தியாலயம்), சாந்தி (B.com Extant) யொலிற்றா (சுவிஸ்), தாசன் (அந்தோறா), பாபு, ஜோயல் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வு இன்று (18.07.2022) திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா கோவிலிலும், கல்கமுவா அர்ச் அந்தோனியார் கோவிலிலும், ஜேர்மனி R.C கோவிலிலும் மற்றும் கொழும்பு R.C கோவிலிலும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் அன்னாரின் நினைவாக யாழ். பிரதான வீதி இல 286 இல் அமைந்துள்ள மண்டபத்தில் மதிய போசனம் வழங்கப்படும் அத்தருணம் தாங்களும் வருகை தந்து இந்நிகழ்வில் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**

**தொடர்பு : 009477063 8766, 0049 0163849903**

# 31ஆம் நாள் நினைவேந்தலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும்

பிறப்பு 29 . 09 . 1940

இறப்பு 18 . 06 . 2022



யாழ். பலாலி தெற்கு வசாவிளானைப் பிறப்பிடமாகவும் வேம்பிராய், மீசாலை, கிளிநொச்சி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் கந்தசாமி தவமணி

அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்.

இன்றோடு 31 நாட்கள் பூவுலகில் நீங்கள் இல்லை.
இதயம் கனக்கிறது உன் பணிகள் முடித்து விட்டு
இறைவனடி சேர்ந்து விட்டீர்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்ற வேளையில் நேரில் வந்தும், தொலைபேசி, முகநூல், மின்னஞ்சல் ஊடாகவும் நமக்கு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.


அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலி சார்பாக வேம்பிராய் மீசாலை கலட்டிப் பிள்ளையார் ஆலயத்தில் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும், அன்ன தானம் வழங்கும் நிகழ்வும் ஆடிமாதம் 18ஆம் திகதி திங்கட்கிழமை மதியம் (ஜுலை18.2022) நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**திரு.திருமதி நவரத்தினம் யமுனாராணி குடும்பத்தினர்**

**தொடர்பு : + 1(647)230-0883** (CR 36659) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 19 . 10 . 1942

மறைவு 18 . 07 . 2021

கடந்த 18.07.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த

### அமரர் மரியாம்பிள்ளை பீற்றர் பிலிப்புநேரி

(ஓய்வுபெற்ற வருமான மேற்பார்வையாளர் - பிரதேச சபை, பருத்தித்துறை.)

அப்பா!

எமது உயர்வையே நிதமும் சிந்தித்தீர்கள்
இன்று நீங்கள் எங்களுடன் இல்லை
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
மாறாது உங்கள் நினைவுகள்
என்றும் உங்கள் நினைவுகளுடன்

வால்ட்டன் வீதி,
தும்பளை, பருத்தித்துறை.

மனைவி,
பிள்ளைகள்

(CS 45566) (3/6)

## மரண அறிவித்தல்



பிறப்பு 14 . 01 . 1963

இறப்பு 16 . 07 . 2022

### திரு.கிருஸ்ணசாமி சிவலிங்கம் (சிவா)

நீராவியடி கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணசாமி சிவலிங்கம் நேற்றுமுன்தினம் (16.07.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமி - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், கணேசலிங்கம், மகாலட்சுமி, தியாகலிங்கம் (ஜேர்மனி), பூரணலிங்கம் (நெதர்லாந்து), காலஞ்சென்ற சங்கரலிங்கம் மற்றும் வீரலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், புஸ்பவதி, சிவராஜா, உதயராணி (ஜேர்மனி), காலஞ்சென்ற லீலாதேவி மற்றும் ஸ்ரீகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுபாங்கி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம்), சித்திராங்கி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், வேலணை பிரதேச சபை), ஹர்ஷனன், அரூஷனன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2022) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(cs45582) (2.6)

தகவல் :
குடும்பத்தினர்
077 846 8965

## நாற்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 . 06 . 1927

மறைவு 18 . 07 . 1982

### சின்னையா பொன்னையா



தோற்றம் 17 . 07 . 1951

மறைவு 18 . 07 . 1982

### பொன்னையா கணேசன்

(இலங்கை வங்கி)

திதி : திரியோதசி (26.07.2022)

எமது குடும்ப விளக்குகள் அணைந்து நாற்பது ஆண்டுகள் ஆனது. பாசமான தந்தையாய் அன்பான அண்ணனாய் வாழ்ந்து கொண்டிருந்த உங்களை சில கொடூரர்களால் இழந்து தவிக்கிறோம். நீங்கள் செய்த புண்ணியங்கள் இன்று எங்களை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. எத்தனை ஆண்டுகள் ஆனாலும் எம் மனதில் அணையாத் தீபங்களாய் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பொன் கணேசா இல்லம்
பேராலை, பளை

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்
வேலாயுதபிள்ளை புனிதமலர்

(CS 20003) (3.6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளை சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய இன்று சுபவேளையில் புதிய கட்டடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

சிறந்த சேவையைப் பெற்றுக்கொள்ள
எமது கிளைக்கு வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்!

இல: 86, பிரதான வீதி, பருத்தித்துறை
தொலைபேசி: 021 226 3254/ 021 226 3570 | தொலைநகல்: 021 226 3254 | மின்னஞ்சல்: boc028@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# அடுத்த பெரும்போகத்துக்கு 150,000 மெற்றிக் தொன் உரம்

## விவசாய அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 18

அடுத்த பெரும்போகத்துக்காக ஒரு லட்சத்துக்கு 50 ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தை இறக்குமதி செய்வதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அடுத்த பெரும்போகம் தொடர்பில் தற்போதே திட்டமிட்டு இந்தப் பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்று இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் பொதுமுகாமையாளர் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார். உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் கடன் திட்டங்களுக்கு அமைய யூரியா உரம் கொள்வனவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம)



# அறுவடைக்குச் சிறந்தவிலை கிளி. விவசாயிகள் கோரிக்கை!

கிளிநொச்சி, ஜூலை 18

எரிபொருள் தட்டுப்பாடு, உரப்பற்றாக்குறை என்று பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் அறுவடை செய்துள்ள நெல்லுக்கு உரிய சிறந்த விலைகளை அதிகாரிகள் பெற்றுத்தர வேண்டும் என்று கிளிநொச்சி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி அக்கராயன் நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி தெரிவித்ததாவது:-

இந்த வருடம் நெற்செய்கையானது அனைத்து விவசாயிகளுக்கும் பெரும் சவால் மிக்கதாகவே அமைந்துள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு, உரப் பற்றாக்குறை என்பவற்றால் விவசாயிகள் பெரும் துன்பங்களை எதிர்கொண்டனர். இவற்றையெல்லாம் கடந்து விளைவித்த பொருள்களை உணவுப் பாதுகாப்பு என்ற பெயரில் வீட்டில் வைத்திருக்கமுடியாது. எனவே சிறந்த விலைகளைப் பெற்றுத்தந்து விவசாயிகள் எதிர்கொண்டுள்ள பணப்பற்றாக்குறை மற்றும் இதர நெருக்கடிகளை ஓரளவேனும் நிவர்த்திசெய்ய அதிகாரிகள் முன்வர வேண்டும் - என்றார். (ம-13)

# அறுவடையை மேற்கொள்ள டீசல் இதுவரை தரவில்லை

## முல்லைத்தீவு விவசாயிகள் அந்தரிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 18

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஒலுமடுவில் கற்கிடங்கு குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சிறுபோகநெற்செய்கைக்கு டீசல் வழங்கப்படாமையால் அறுவடை மேற்கொள்ளவும் அறுவடை செய்த நெல்லை வீட்டுக்கு எடுத்துச் செல்லவும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என அந்தப் பகுதி விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கற்கிடங்கு குளத்தின் கீழ் எரிபொருள், பசளை, மருந்து போன்றவற்றின் தட்டுப்பாடு மற்றும் யானைகளின் தாக்குதல் ஆகிய பல்வேறு சிரமங்களின் மத்தியில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது அறுவடைக்குத் தயார் நிலையிலுள்ளது. ஆயினும் அறுவடை செய்வதற்கு இயந்திரத்துக்கு டீசல் இல்லை. ஆயிரத்து 500 ரூபாவரையில் வெளியில் டீசல் விற்பனை செய்யப்படுகின்றது.

கடந்த காலங்களில் ஒரு ஏக்கர் வயல் நிலத்தை அறுவடைசெய்ய 7 ஆயிரத்து 500 ரூபா போதுமானதாக இருந்தது. தற்போது ஒரு ஏக்கர் நெல்லை அறுவடைசெய்ய 18 ஆயிரம் ரூபாவுக்கு டீசல் வாங்கி இயந்திரத்துக்கு 15 ஆயிரம் ரூபா கூலி வழங்கி மொத்தமாக 33 ஆயிரம் ரூபா செலவு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் நாங்கள் எவ்வாறு விவசாயம் மேற்கொள்வது?

கமநலசேவை நிலையம் ஊடாக விவசாயிகளின் விவரங்கள் மாங்குளம் எரிபொருள் நிரப்பு நிலையத்திடம் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடந்த ஒரு மாத காலத்துக்கு மேலாக மாங்குளம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் வழங்கப்படவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் இந்தநிலையே காணப்படுகிறது.



ஆயினும் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் அறுவடை மேற்கொள்ளப்பட்டாலும் அதனை வீடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கு வாகனங்களுக்கு டீசல் இல்லை. இதனால் பச்சை நெல்லாக மூன்று நாள்களுக்கு மேலாக உரப்பையிலேயே இருக்கின்றது. இந்த நிலை நீடித்தால் நெல் முழுவதும் பழுதடையும் நிலை ஏற்படும். ஆகவே விவசாயிகளின் துயரங்களைக் கருதி முல்லைத்தீவு மாவட்டச் செயலர் ஏக்கருக்கு பத்து லீற்றர் டீசல் என்றாலும் வழங்க ஆவன செய்யவேண்டும் - என்றனர்.

இது குறித்து முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரைக் கேட்ட போது:

அத்தியாவசிய சேவைகள் உள்ளிட்ட விவசாயிகளின் தேவைக்கும் எரிபொருள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆயினும் நாடு முழுவதுமுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக எமக்குக் கிடைக்கிற எரிபொருளை பகிர்ந்து வழங்குகிறோம். விரைவில் எமக்குரிய எரிபொருள் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். எரிபொருள் கிடைக்கப்பெற்றதும் விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும் - என்றார். (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 10 . 1931

மறைவு 17 . 07 . 2022

## திருமதி வைத்தியலிங்கம் பூமணி

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைத்தியலிங்கம் பூமணி நேற்று (17.07.2022) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா நாகமுத்து ஆகியோரின் மகளும், கந்தர் ஆனந்திப்பிள்ளை ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற வைத்திய லிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், ஸ்ரீஸ்கந்தவ ரோதயன் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்), ஸ்ரீஇராஜவரோதயன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயலட்சுமி, காஞ்சனா ஆகியோரின் அன்பு மாமியும், சிவகுகன் - கஜாசனா, கஜாசனன்-ஹம்சா, நிதேஷன் - சுவர்ணா சனா, அருணன், அச்சுதன், அட்சயன் ஆகியோரின் பேர்த்தியும், அபிசரன், அபி நேகா, அர்ச்சிதன், ஹரிசிவகாமி ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான நடராசா, தியாகராசா, சின்னம்மா, பவளரத்தினம் மற்றும் திரவியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சந்திரசேகரப்பிள்ளை, அபிராமிப் பிள்ளை, சிற்றம்பலம், கனகசபை, ஆச்சியம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொலைபேசி: 0777 682 265**
**துரை வீதி, இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 20015) 1/6

# மரண அறிவித்தல்



பிறப்பு 01 . 05 . 1935

இறப்பு 17 . 07 . 2022

## இராமலிங்கம் சுந்தரசிவபாக்கியம் அம்மா

யாழ்ப்பாணம் சுழிபுரம் வழக்கம்பரையை பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சுந்தரசிவபாக்கியம் அம்மா அவர்கள் நேற்று (17.07.2022) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு ஐயா சின்னம்மா அம்மாள் ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும், செல்லையா பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், இராமலிங்கத்தின் அன்புத் துணைவியாரும், திருச்செல்வம் (சவுதி), ரதி (ஆசிரியை, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சைனி, ஈஸ்வரன் (துபாலதிபர், பிராந்திய கணக்கீட்டு காரியாலயம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியாரும், ராஜா, ரவி, சதுர்ஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கதிர்காமநாத ஐயா, பாக்கியம்மாள், நீதிநாத குருக்கள் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2022) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**ஈஸ்வரன் (மருமகன்)**
**077 606 7037**

(CS 20011) 1/6

# மரண அறிவித்தல்

## திரு. மயில்வாகனம் வினாசித்தம்பி

### (முன்னாள் உரிமையாளர், குகன் ஸ்ரோஸ் – பளை)



இலங்கை அல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் புலோப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. மயில்வாகனம் வினாசித்தம்பி (முன்னாள் உரிமையாளர் குகன் ஸ்ராஸ் - பளை) அவர்கள் கடந்த (12.07.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தெய்வானைப்பிள்ளை (மாது) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - வள்ளிப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும், குசேலா (லண்டன்), குகதாஸ் (இந்தியா), பிரேமதாஸ் (லண்டன்), கோகில தாஸ் (லண்டன்), ஆகியோரின் அன்புத் தந்தையும், குணரத்தினம் (லண்டன்), லதா (இந்தியா), டயாதேவி (லண்டன்), காந்தரூபி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், இளமாறன் + ஜனனீதா (லண்டன்), இந்துஜா + சுஜாகன் (லண்டன்), கஸ்தூரி + பிரகாஷன் (நெதர்லாண்ட்), மகிழ்ராஜ் (இந்தியா), பிரதுஜா (லண்டன்), பிரதோஸ் (லண்டன்), பிருத்திகா (லண்டன்), நிதுஷன் (லண்டன்) ஆகியோரின் அன்பு தாத்தாவும், அபிநயா (லண்டன்), அஞ்சலிக்கா (லண்டன்), ஆரியன் (நெதர்லாண்ட்), ஆகியோரின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான கனகசபை, குஞ்சுப்பிள்ளை, தம்பிராசா (துரை), தம்பித்துரை, செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் யோகம்மா, பூரணம், பாக்கியம், தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை, காலஞ்சென்ற பீற்றர்பெனடிற் மற்றும் தனலக்ஸ்மி, காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - லக்ஸ்மி, காலஞ்சென்ற பஞ்சாட்சரம் மற்றும் செல்வராணி ஆகியோரின் அன்பு சம்மந்தியும், மனோகரசிங்கம் (கனடா), நிமலமோகன் (சுவிஸ்), பத்மராணி, நிமலரங்கன், நிமல ரூபன் ஆகியோரின் அன்பு சிறிய தந்தையும், கமலாதேவி, சரோஜாதேவி, சரஸ்வதி, பொன்னுத்துரை, யோகலிங்கம் (கனடா), யோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாய் மாமனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, புஸ்பமலர், காலஞ்சென்ற நடராஜா, மலர் தம்பதிகளின் மைத்துனரும், சுரேஷ்குமார் குடும்பம் (கனடா), சிவகுமார் குடும்பம் (இலங்கை), நந்தகுமார் குடும்பம் (கனடா), உதயகுமார் குடும்பம் (கனடா), தயா குடும்பம் (இலங்கை), கண்ணன் குடும்பம் (இலங்கை), கேமா குடும்பம் (இலங்கை) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் எதிர்வரும் (20.07.2022) புதன்கிழமை புலோப் பளை பளையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணி யளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக புலோப்பளை பொத்பத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

| | |
|---|---|
| குகதாஸ் (இந்தியா) | : 0091 98400 46208, 0091 98408 46206 |
| குணரத்தினம் (லண்டன்) | : 0044 781 755 4893 |
| பிரேம்தாஸ் (லண்டன்) | : 0044 777 380 3807 |
| கோகிலதாஸ் (லண்டன்) | : 0044 787 514 9229 |
| இலங்கை | : 0094 766 094 532, 0094 776 462 081 |

(CR 36069) 3/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரணிலின் வீட்டுக்கு தீ வைப்பு:

# பிரதான சந்தேகநபர் டுபாய்க்கு தப்பியோட்டம்

## ஐக்கிய மக்கள் சக்தி பிரமுகரின் மகன் என்கிறது சி.ஐ.டி.

கொழும்பு, ஜுலை 18

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட வீட்டுக்கு தீ வைத்த சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த, முன்னாள் பிரதி அமைச்சர் மகன் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணிக்கு டுபாய் சென்றுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தப்பியோடிய சந்தேகநபரின் தந்தை, மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் பிரதியமைச்சர் எனவும், பின்னர் அவர் கட்சியில் இருந்து விலகி ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டதாகவும், தற்போது அவர் கொழும்புக்கு அருகில் உள்ள பிரதேசத்தில் தொகுதி அமைப்பாளராகக் கடமையாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

# கண்ணீர்புகைக்குண்டுகளுடன் சந்தேகநபர் நேற்றுக் கைது

நாடாளுமன்றத்தை முற்றுகையிடும் முயற்சியின்போது இடம்பெற்ற மோதலில் பொலிஸ் அதிகாரிகளை தாக்கிய ஆர்ப்பாட்டக்காரர்களால் திருடப்பட்ட 50 கண்ணீர் புகை குண்டுகளுடன் சந்தேகநபர் ஒருவர் ஒபேசேகரபுரவில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தின்போது, இராணுவத்தினர் இருவரை தாக்கி அவர்களிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றியதாக முறைப்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)



# நடமாடும் எரிபொருள் நிரப்பு சேவை ஆரம்பம்

கொழும்பு, ஜுலை 18

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடமாடும் எரிபொருள் நிரப்பு சேவையை ஆரம்பித்துள்ளது.

பரீட்சார்த்த திட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நடமாடும் எரிபொருள் நிரப்பு சேவையின் ஊடாக, முச்சக்கர வண்டிகள் மற்றும் மின்பிறப்பாக்கிகளுக்கான எரிபொருளை வழங்க எதிர்பார்க்கப்படுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்ப நிலையங்களில் இருந்து வெகு தொலைவிலுள்ள திறந்த வெளி இடங்களில் இந்த நடமாடும் எரிபொருள் விநியோக திட்டத்தை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)




வடக்கு - கிழக்கு

# ஊழல்வாதிகளுக்கு எதிராகப் போராட்டம்

கொழும்பு, ஜுலை 18

வடக்கு - கிழக்கு ஊழல்வாதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அவர்களை உடனடியாகக் கைதுசெய்யக் கோரியும் மட்டக்களப்பில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

தமிழ் இளையோர் மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்னால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'தமிழ்ச் சமூகத்தை மலினப்படுத்தி அடகு வைத்து ராஜபக்ச குடும்ப ஊழல்வாதிகளுக்குப் பின்னால் பிழைப்பு நடத்திய பலர் வடக்கு - கிழக்கில் உள்ளனர். எமது சமூகத்தை இழிவுபடுத்திய இந்த ஊழல்வாதிகள் அனைவரும் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும்' என்று போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த ஊழல்வாதிகள் கொள்ளையடித்த சொத்துக்களையும் மீட்டெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர். (அ-ஒ-22)

தமிழ்த் தேசியக் கட்சிகளின்

# இறுதி ஆவணம் உறுதியாகும் இன்று

ஜனாதிபதி வேட்பாளர்கள், அதன் பின்னர் அமையவுள்ள அரசாங்கம், போராட்ட அமைப்புக்கள் ஆகியோரிடம் தமிழ் மக்கள் சார்பில் கோரிக்கை முன்வைப்பதற்கான வரைவை இன்று இறுதி செய்வதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் முடிவு செய்துள்ளன.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா ஆகியோர் நேற்றைய இணையவழி சந்திப்பில் பங்கேற்றனர்.

இதன்போது தமிழ் மக்கள் சார்பில் கோரிக்கை ஆவணம் முன்வைக்க தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பில் நேற்றைய கலந்துரையாடலில் ஆராயப்பட்ட வரைவை இன்று இறுதி செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### முட்டுக்கொடுக்க...

நாடாளுமன்றத்தில் நாளைமறுதினம் நடைபெறவுள்ள புதிய ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டுமென்ற கட்சியின் தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை. இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.

அந்தக்கட்சியின் பொதுச்செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் நேற்று ஊடகங்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

'பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்பதே கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்களின் கருத்தாக உள்ளது' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். ரணிலை ஆதரிக்கும் பெரமுனவின் தீர்மானத்தை, அந்தக் கட்சியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் கேள்விக்கு உட்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-22)

### ரணிலுக்கு...

தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது. அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற அமர்வு முடிந்ததும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்தோம். அவர் கூறியுள்ள விடயங்களை எங்கள் மத்திய குழுவுக்கு சமர்ப்பிப்போம். மத்தியகுழு இறுதி முடிவெடுக்கும். நேற்றுக் காலையும் சஜித் பிரேமதாஸ என்னைத் தொடர்பு கொண்டார். மீண்டும் எமது ஆதரவைக் கேட்டிருந்தார்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்கவை நாம் சந்திக்கப் போவதில்லை. அவர் இன்று நடக்கும் மாற்றத்துக்கு நேர் எதிரான தரப்புடன் சேர்ந்து செயற்படுபவராக நாம் கருதுவதால், அவருடன் பேசியும் பலனில்லையென்ற முடிவுக்கு வந்துள்ளோம்.

தேசிய மக்கள் சக்தியினர் நேற்று மதியம் எம்மைச் சந்தித்தார்கள். எமது மக்களின் அபிலாஷைகளை ஏற்காத, அங்கீகரிக்காதவர்களை ஆதரிப்பது கடினமாக இருக்குமென அவர்களிடம் சொல்லியுள்ளோம்.

இதேவேளை- சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார இருவரும் ஒற்றை யாட்சி அரசமைப்பை நீக்கி சமஷ்டி அரசமைப்பை கொண்டு வருவதற்கான எந்தவொரு இணக்கத்தையும் வெளியிடவில்லை.

யாரை ஆதரிப்பது, அல்லது யாரையும் ஆதரிக்காமலிருப்பதா என்பதை எமது மத்தியகுழு கூடி முடிவெடுக்கும். இரண்டு வருடங்களின் முன்னர் அமைந்த, மக்களால் நிராகரிக்கப்பட்ட நாடாளுமன்றத்திலேயே இந்த நாடகங்கள் அரங்கேறவுள்ளன. இதனால் உண்மையிலேயே மக்களின் தாகம் தீரப்போவதில்லை என்றார். (அ-ஒ-இ)

### யாரை ஆதரிப்பது?...

நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இன்று கூட்டப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இன்று மாலை அவரது வீட்டில் கூட்டமொன்று நடைபெறவுள்ளது. இதன்போது கூட்டமைப்பின் ஆதரவு யாருக்கு என்ற நிலைப்பாடு வெளியாகலாம் என அறியமுடிகின்றது. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி–20 மாநாட்டில் ரஷ்யா வேண்டாம்

## கனடா எதிர்ப்பு

ஒட்டாவா, ஜூலை 18
ஜி-20 மாநாட்டில் ரஷ்யா பங்கேற்பதானது, தீயணைப்பு வீரர்களின் கூட்டத்துக்கு தீ வைப்பவர்களை அழைப்பதற்கு ஒப்பானது என்று கனடா தெரிவித்துள்ளது.

இந்தோனேஷியாவின் பாலி தீவில் ஜி-20 நாடுகளின் நிதி அமைச்சர் களின் கூட்டம் இடம்பெற்றது. இதில் ரஷ்யப் பிரதிநிதியும் கலந்துகொண்டார். இதற்கு கனடா கடும் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்துள்ளது.

ஜி-20 நாடுகளின் நிதி மந்திரிகளின் கூட்டத்தில் ரஷ்யாவின் பங்கேற்பு அபத்தமானது.

உக்ரைனின் சட்டவிரோத ஆக்கிரமிப்பு மற்றும் அதன் பொருளாதார விளைவுகளுக்கு ரஷ்யா நேரடியாகவும் மறைமுகமாகவும் முழுப் பொறுப்பாகவுள்ளது - என்றார். (ம)

### எம்.பிக்களுக்கு...

நாடாளுமன்ற உறுப்பினர்களின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழ், அவர்கள் நாடாளுமன்றத்துக்கு வருவதற்கும், திரும்பிச் செல்வதற்கும் சுதந்திரம் காணப்படுவதாகவும், நாடாளுமன்றத்துக்குள்ளும் சுதந்திரமாக செயற்படுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு எதிராக செயற்படுவதானது நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறுவதுடன் அச்சுறுத்தலாகவும் அமையும் என்று பதில் ஜனாதிபதி வழங்கிய ஆலோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வன்முறையைப் பரப்பும் கலகக்காரர்களால் சமூக வலைத்தளங்கள் ஊடாக குறிப்பிட்ட வேட்பாளர்களுக்கு வாக்களித்து விட்டு கிராமத்துக்கு வர வேண்டாம் என்று பதிவிட்டு, அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக பதில் ஜனாதிபதிக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதற்கு முன்னரும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் இல்லங்களுக்கு தீ வைத்து அவற்றை அழித்துள்ளதோடு, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார். இவற்றை சுட்டிக்காட்டி கலகக்காரர்களால் மறைமுகமாக கொலைமிரட்டல் விடுக்கப்படுவதாகவும் பதில் ஜனாதிபதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வாறு கொலை மிரட்டல் விடுக்கப்படுவதால் தமக்கு நாடாளுமன்றத்தில் சுதந்திரமாக வாக்களிக்க முடியாத சூழல் காணப்படுவதாகவும் பதில் ஜனாதிபதியிடம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். அதற்கமைய இவை தொடர்பில் துரித விசாரணைகளை முன்னெடுக்குமாறு பதில் ஜனாதிபதி பாதுகாப்புத் தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக வாக்களிக்கும்போது, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரால் பிறிதொருவருக்கு அச்சுறுத்தல் மற்றும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டால், நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டத்தின் பிரகாரம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலாவது அமைச்சரவை கூட்டத்திலும் தெரிவித்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### மூன்று...

முதல் நுகர்வோருக்கு தொடர்ந்து வழங்குவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

லங்கா ஐ.ஓ.சி.யும் அதே விலை மாற்றத்தை நேற்றிரவு முதல் நடைமுறைப்படுத்துவதாக அறிவித்துள்ளது.

பெற்றோல் 92 ஒக்ரேன் 20 ரூபாவால் குறைக்கப்பட்டு, புதிய விலை லீற்றர் ஒன்று 450 ரூபாவாகவும், பெற்றோல் 95 ஒக்ரேன் 10 ரூபாவால் குறைக்கப்பட்டு, புதிய விலை லீற்றர் ஒன்று 540 ரூபாவாகவும்,

ஓட்டோ டீசல் 20 ரூபாவால் குறைக்கப்பட்டு, புதிய விலை லீற்றர் ஒன்று 440 ரூபாவாகவும், சுப்பர் டீசல் 10 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 510 ரூபாவாகவும் இனிமேல் விற்பனை செய்யப்படும்.

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கடந்த 3 ஆண்டுகளில் பெற்றோல் விலை தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

### இந்தியா...

நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வுகளுக்கு முன்னதாக இடம்பெற்ற சம்பிரதாயபூர்வமான அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் பின்னரே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கு இந்தியா தலையிடவேண்டும் என தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இரு கட்சிகள் இலங்கை நிலைவரம் குறித்து குறிப்பாக தமிழர் நிலைமை குறித்து கரிசனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### சிங்கப்பூரிலும்...

தங்கியிருப்பதால் பாதுகாப்புச் சிக்கல்கள் ஏற்படலாம். எனவே, அவர் 15 நாள்களுக்குள் சிங்கப்பூரை விட்டு வெளியேறவேண்டும் - இவ்வாறு சிங்கப்பூர் அரசு, கோத்தாபய ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்துள்ளது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தின் காரணமாகக் கடந்த 13ஆம் திகதி அதிகாலை மாலைதீவுக்குத் தப்பிச் சென்றிருந்த கோத்தாபய ராஜபக்ச, பின்னர் அங்கிருந்து மறுநாள் 14ஆம் திகதி மாலை சிங்கப்பூருக்குச் சென்றார். அங்கு அவர் தனது நண்பர் ஒருவருக்குச் சொந்தமான வீட்டில் தங்கியிருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், கோத்தாபய ராஜபக்சவை நேற்றுமுன்தினம் சந்தித்த சிங்கப்பூர் அமைச்சர் காசி விஸ்வநாதன் சண்முகம், சிங்கப்பூர் அரசால் இனிப் பாதுகாப்பு அளிக்கமுடியாது எனவும், நாட்டை விட்டு 15 நாள்களுக்குள் வெளியேறும்படி கோரிக்கை விடுத்தார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை - சிங்கப்பூரிலிருந்து இந்தியாவுக்கு வருவதற்கு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விடுத்த கோரிக்கையை ஏற்க இந்திய அரசு மறுத்துவிட்டது என 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது. (அ-ஒ-22)

### வீடு புகுந்து...

இது தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலையில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பற்றிமா தேவாலயத்துக்கு முன்புறமாகவுள்ள வீட்டில், பெண்ணொருவர் குழந்தைகளுடன் தனித்து வசித்து வருகின்றார். அவரது கணவன் வெளிநாடு சென்றுள்ளார்.

இந்நிலையில் நேற்று அதிகாலை 4 மணியளவில் வீட்டின் கூரையை உடைத்துக்கொண்டு முகமூடி அணிந்த ஒருவர் உள்நுழைந்துள்ளார். அவர் வீட்டின் கதவை திறந்து விட்டதும், வெளியிலிருந்து மேலும் 4 முகமூடி அணிந்த கொள்ளையர்கள் புகுந்துள்ளனர். அவர்கள் வீட்டாரை கத்தி முனையில் அச்சுறுத்தி 20 பவுண் நகையை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. சந்தேகநபர்களின் விவரங்களும் முறைப்பாட்டின் போது கூறப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக 4 பேரை பொலிஸார் சந்தேகத்தில் கைது செய்துள்ளனர். அவர்களில் 20 மற்றும் 21 வயதுகளைச் சேர்ந்தவர்கள். மேலும் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் என்று அவர்கள் தொடர்பான விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (அ-ஒ-125)

### வணிக...

எரிபொருள் பாஸ் நடைமுறையானது சில தினங்களில் மேம்படுத்தப்படும் என்று அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். தரவுகள் சரிபார்க்கப்பட்டதன் பின்னர், ஒவ்வொரு வாகனத்துக்கும் 'க்யூஆர்' குறியீடு வழங்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (அ-ஒ-இ)

### 'கோத்தா கோ கம'...

திடலில் ஆரம்பிக்கப்பட்ட 'கோத்தா கோ கம'வுக்கு நேற்றுடன் வயது நூறு நாள். இதனை முன்னிட்டு, இந்தப் போராட்டத்தின் போது உயிரிழந்தவர்களுக்கான அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி மீரிஹானவில் உள்ள கோத்தாபய ராஜபக்சவின் தனிப்பட்ட இல்லத்தை முற்றுகையிட்டு மக்கள் கிளர்ச்சி ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 9ஆம் திகதி காலிமுகத்திடல் போராட்டத்துக்கான அழைப்பு சமூக வலைத்தளங்கள் ஊடாக விடுக்கப்பட்டது. அன்றைய தினம் பல ஆயிரக்கணக்கானோர் காலிமுகத்திடலில் ஒன்றுகூடினர்.

அவர்கள், கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியிலிருந்து விலகவேண்டும் என்பது உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ச்சியாக காலிமுகத்திடலில் தங்கியிருந்து போராட ஆரம்பித்தனர். அதன் பின்னர் காலிமுகத்திடலில் கோத்தா கோ கம கிராமம் முளைத்தது. இந்த மக்கள் புரட்சியே மே 9ஆம் திகதி மஹிந்த ராஜபக்சவை பிரதமர் பதவியிலிருந்து அகற்றியது. அதன் தொடர்ச்சியாகவே கடந்த ஜூலை 9ஆம் திகதி கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட மக்களின் புரட்சியால் ஜனாதிபதி பதவியிலிருந்து கோத்தாபயவும் தப்பியோட நேர்ந்தது. (அ-ஒ-5)

### நிறுத்தப்பட்டுள்ள...

விநியோகம் தொடங்கும் வரை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின்(சிபெட்கோ) எரிபொருள் நிலையங்களில் வரிசையில் நிற்க வேண்டாமென்று பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. வாகனங்கள் அகற்றப்பட்ட பின்னரே அந்த எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்யப்படும். இணையவழி ஊடாக பதியப்பட்ட தேசிய எரிபொருள் பாஸ் மற்றும் வாகன இலக்கத் தகட்டின் கடைசி இலக்கம் இரண்டும் கட்டாயமாக்கப்பட்டு நடைமுறைக்கு வரும் திகதி அறிவிக்கப்படும் - என்றுள்ளது. (அ-ஒ-இ)

Visit, Study & Work
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
* Visitor / Tourist Visa – All countries
* Minor Education – under age 17
* Skilled Migration – Express entry (PR)
* Study & Work – Canada (IELTS தேவையில்லை)
* Student Visa
o Canada, UK, Australia & New Zealand (IELTS 6 – 6.5 தேவை)
o France, Germany & Latvia (IELTS தேவையில்லை)
Visa Consultant
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna. Tel: 0770385584
naltcjaffna@gmail.com

வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல FAMILY DINING RESTAURANT க்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவை.
1. Chef 2. Cook 3. Kitchen Helper 4. Waiter
தங்குமிட வசதி உண்டு.
074 295 8663

காணி விற்பனைக்கு
யாழ் நாவற்குழியில் 90 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு
- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில்
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் (500000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்
பார்வை இடும் நேரம்
காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493,076 490 6029



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.